**செ. கு. எண்:028** **நாள்: 07.03.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின்

''சர்வதேச மகளிர் தின'' வாழ்த்துச் செய்தி

பெண்ணின் உயர்வினை உலகிற்கு பறைசாற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் 8–ஆம் நாள் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த இனிய நாளில் அனைத்து மகளிர்க்கும் எனது இனிய மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்கள் கல்வி அறிவு பெற்று, பொருளாதார ஏற்றம் பெற்றிடவும், பெண்களின் முன்னேற்றத்திற்காக கருவில் இருக்கும் சிசுவில் இருந்து முதியோர் வரை பயன்பெறும் வகையிலும், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், ஏழைப் பெண்கள் திருமண உதவி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 4 கிராம் தங்க நாணயத்தை 8 கிராமாக உயர்த்தியது, தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் கர்ப்பிணி பெண்களுக்கு ஒன்பது மாத காலம் மகப்பேறு விடுப்பு, இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் திட்டம், பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திட மகளிர் சுய உதவிக் குழுக்கள், வளரிளம் பெண்களுக்கு விலையில்லா சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டம், இந்தியாவிற்கே முன்னோடியாக பெண்களுக்கு எதிரான குற்றங்களை களைந்திட 13 அம்ச திட்டம், 100% மானியத்தில் நவீன தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம், வேலைக்குச் செல்லும் மகளிர் பாதுகாப்பான வசிப்பிடத்தில் தங்கிட வேண்டுமென்ற உயரிய நோக்கில் பணிபுரியும் மகளிர் விடுதிகளை ஏற்படுத்தியது, முதன்முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்தது போன்ற பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்ற தேர்தல் அறிக்கையில் அறிவித்த, உழைக்கும் மகளிர் பயன்பெறும் வகையில், ஆண்டு ஒன்றுக்கு 200 கோடி ரூபாய் செலவில் இரு சக்கர வாகனம் வாங்கிட ஐம்பது சதவீத மானியம் அல்லது அதிகபட்சமாக ரூபாய் இருபதாயிரம் வழங்கிடும் ''அம்மா இருசக்கர வாகனத் திட்டம்'', ஏழை கர்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவியினை 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்ற அறிவிப்புகளை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்திட ஆணையிட்டுள்ளது.

பெண்கள் ஒற்றுமையுடனும், தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் வாழ்ந்து, வாழ்வில் எதிர்படும் சவால்களை உறுதியுடன் எதிர்கொண்டு, உலகை வாழவைக்கும் பெண்ணாக அனைத்து மகளிரும் உயர்ந்து விளங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனது இதயபூர்வமான மகளிர் தின நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**